15-11-2016

தினமணி

# முதல் 2 ஆயிரம் ரூபாயில் மரக்கன்றுகள் வாங்கி மக்களுக்கு இலவசமாக கொடுத்த விவசாயி



அரியலூர் அருகே வங்கியில் நீண்ட வரிசையில் நின்று பெற்ற புதிய 2,000 ரூபாயில் மரக்கன்றுகள் வாங்கி பொதுமக்களுக்கு இலவசமாக கொடுத்தார்

விவசாயி.
அரியலூர் மாவட்டம், கடுகூர் கிராமத்தைச் சேர்ந்த கணேசன் மகன் கருப்பையன் (34). விவசாயி. ஞாயிற்றுக்கிழமை காலை இவர், வங்கியில் நீண்ட வரிசையில் நின்று தன்னிடம் இருந்த பழைய 500 ரூபாய் நோட்டுகளை கொடுத்து புதிய ரூ. 2 ஆயிரம் நோட்டை பெற்றார்.

மோடி அரசு அளித்த இந்த புதிய ரூபாய் நோட்டை விவசாயத்திற்கும், பொதுமக்களுக்கும் முதல்முதலில் செலவு செய்வது என முடிவெடுத்த கருப்பையன், தெருவில் மரக்கன்றுகள் விற்று வந்தவரிடம் ரூ. 2 ஆயிரத்துக்கும் மரக்கன்றுகளை வாங்கி, தனக்கென 2 மரக்கன்றுகளை மட்டும் வைத்துக் கொண்டு எஞ்சியவற்றை மக்களுக்கு இலவசமாக கொடுத்தார்.

இதுகுறித்து விவசாயி கருப்பையன் கூறியது: 10ஆம் வகுப்பு வரை படித்த எனக்கு சமூக சேவையில் ஈடுபாடு அதிகம். எங்களின் 7 ஏக்கர் நிலத்தில் கம்பு, சோளம், கடலை உள்ளிட்ட பயிர்கள் சாகுபடி செய்து வருகிறோம். நான் கடந்த 2006 ஆம் ஆண்டு வேலைக்காக சிங்கப்பூர் சென்றேன். தற்போது 3 மாத விடுமுறையில் ஊருக்கு வந்துள்ளேன். எங்கள் ஊரில் இந்த புதிய 2 ஆயிரம் ரூபாய் நோட்டை நான்தான் முதல் முதலில் வாங்கியுள்ளேன். ஆகையால் இந்த புதிய ரூபாய் நோட்டில் மரக்கன்றுகளை வாங்கி, அவற்றை மக்களுக்கு இலவசமாக கொடுக்க வேண்டும் என முடிவெடுத்தேன். அந்தநேரத்தில் எங்கள் ஊரில் விவசாயி ஒருவர் மரக்கன்றுகளை விற்றுக் கொண்டிருந்தார்.
உடனே மரக்கன்றுகள் முழுவதையும் இந்த புதிய 2 ஆயிரம் ரூபாயில் வாங்கி, ஓரிரு மரக்கன்றுகளை மட்டும் வைத்துக்கொண்டு,

எஞ்சிய மரக்கன்றுகளை பொதுமக்களுக்கு இலவசமாக கொடுத்தேன். இது எனக்கு மனதிருப்தியை தந்துள்ளது.
பழைய ரூ. 500, 1000 நோட்டுகள் செல்லாது என்ற பிரதமர் மோடியின் இந்த அறிவிப்பு மிகவும் பாராட்டத்தக்கது. இந்த அறிவிப்பால் எங்களை போன்ற விவசாயிகள் மற்றும் ஏழைகளுக்கு எவ்வித பாதிப்பும் இல்லை.
இந்த அதிரடி திட்டம் விவசாயிகள் மற்றும் ஏழை மக்களிடையே பெரும் வரவேற்பை பெற்றுள்ளது என்றார்.
புதிய 2 ஆயிரம் ரூபாய் நோட்டை பெற்ற பலரும் சுயப்படம் எடுத்து, சமூக வலைதளங்களில் பதிவிட்டு வரும் நிலையில், நீண்ட வரிசையில் நின்று பெற்ற புதிய 2 ஆயிரம் ரூபாயில் மரக்கன்றுகள் வாங்கி, அவற்றை மக்களுக்கு இலவசமாக கொடுத்த கருப்பையனை அந்தப் பகுதி மக்கள் ஆச்சரியமாக பார்த்தனர்.

**பப்பாளியை தீவிரமாக சாகுபடி செய்தும் போதிய விலை இல்லை: அரவக்குறிச்சி விவசாயிகள் கவலை**



கரூர் மாவட்டம், அரவக்குறிச்சி பகுதியில் மருத்துவக் குணம் கொண்ட பப்பாளிகளைச் சாகுபடி செய்வதில் விவசாயிகள் தீவிரங்காட்டி வந்தாலும் போதிய விலை கிடைக்கவில்லையென கவலை தெரிவிக்கின்றனர்.

அரவக்குறிச்சி பகுதியில் சாகுபடியாகும் குறுகிய காலமாக 6 மாதத்தில் அறுவடை செய்யக்கூடிய பப்பாளி சிறப்பான மருந்தாகப் பயன்படுகிறது. இதில் நிறைந்துள்ள வைட்டமின் ஏ சத்து நரம்பு சம்பந்தமான நோய்களைக் குணமாக்கவும்,உடல் எடையைக் குறைக்கவும்,உடலில் உள்ள கெட்ட கொழுப்பைக் குறைக்கவும், நல்ல கண் பார்வைக்கும் ஏற்றது.

மாதவிடாய் பிரச்னைகளுக்குத் தீர்வாகி, தோலுக்கு நிறத்தைத் அளித்து, உடலுக்கு ஜீரண சக்தியையும் அதிகரிக்கிறது. இதன் இலையை நீரில் கொதிக்க வைத்து வடிகட்டிக் குடித்தால் காய்ச்சல் குணமாகும். அரவக்குறிச்சி, வாய்க்காலூர், நம்பாகவுண்டனூர், சீரங்க கவுண்டனூர் உள்ளிட்ட பகுதியில் இதை அதிகளவில் சாகுபடி செய்கின்றனர்.

இதுகுறித்து வாய்க்காலூர் விவசாயி மணி கூறுகையில், அறுவடையான பப்பாளியை விவசாயிகளுக்கு கிலோ ரூ. 12-க்கே விற்கிறோம். ஆனால் நகர்ப்புறங்களில் மட்டுமல்லாது மளிகைக் கடைகளிலும் கிலோ ரூ. 30-க்கு பப்பாளி விற்கப்படுகிறது. விளைவித்த விவசாயிகளுக்கு உரிய விலை கிடைக்கவில்லை என்றார் அவர்.

**பழனியில் மழை: விவசாயிகள் மகிழ்ச்சி**



பழனியில் திங்கள்கிழமை பெய்த மழையால் விவசாயிகளும், பொதுமக்களும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

திண்டுக்கல் மாவட்டத்தில் கடந்த சில வாரங்களுக்கு முன் மாவட்டம் முழுக்க பரவலாக மழை பெய்தது. இதையடுத்து கிராமங்களில் விவசாயிகள் தங்கள் விளை நிலங்களை புழுதி உழவு செய்யத் துவங்கினர். ஆனால் திங்கள்கிழமை மாலை முதல் தொடர்ந்து சாரல் மழை பெய்ததால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். இதனால் நிலத்தடி நீர் மட்டம் உயருவதோடு குடிநீர் பஞ்சமும் அகலும் என்பதால் பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். பழனி நகர் தவிர சுற்றுப்புற கிராமங்களில் பெய்த

மழையால் அணைகளுக்கும், கிணறுகளுக்கும் தண்ணீர்வரத்து துவங்கியுள்ளது.

**ஊத்தங்கரை பகுதிகளில் மாங்காய் விளைச்சல் அமோகம்**



ஊத்தங்கரையை அடுத்த சாலமரத்துப்பட்டி அருகே நிகழாண்டு பருவமாற்று முறையில் விளைவிக்கப்பட்ட மாங்காய் விளைச்சல் அதிகரித்திருப்பதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். ஊத்தங்கரை சுற்றுவட்டாரப் பகுதியில் சுமார் ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் மாந்தோப்புகள் உள்ளன. இந்தப் பகுதியில் உள்ள விவசாயிகள் பருவமுறை மாறிகாய்ப்பு திட்டம் குறித்து பல்வேறு பயிற்சி பெற்றுள்ளனர். தற்போது இந்தப் பகுதியில் உள்ள சுமார் 300 விவசாயிகளின் முயற்சியால் மாந்தோட்டத்தில் பெங்களூரா, நீலம், செந்தூரா, காதர், அல்போன்ஸா உள்ளிட்ட ரகங்கள் பருவம் மாறி காய்க்கும் முறையில் அதிக அளவில் காய்த்துள்ளன. இதுகுறித்து பகுதி விவசாயிகள் கூறியதாவது:

மே, ஜூன் மாதங்களில் காய்க்கும் மாங்காய்கள் பழச்சாறு நிறுவனங்களுக்கு அனுப்பப்படுவதால் கிலோவுக்கு ரூ. 4 முதல் 10 வரை கிடைக்கும். அதில் போதிய லாபம் கிடைப்பதில்லை. ஆனால், தற்போது இந்தப் பருவமாற்று முறையில் விளைவிக்கப்படும் மாங்காய்கள் கிலோ ரூ.40 முதல் 100 வரை விற்கப்படுவதால் அதிக லாபம் கிடைக்கிறது. மேலும் இங்கிருந்து மாங்காய்கள் அதிகளவில் வட மாநிலங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன.

தமிழகத்திலேயே செப்டம்பர் முதல் பிப்ரவரி மாதம் வரை சுமார் 2,500 டன் மாங்காய் விளைச்சல் கொண்ட பகுதி இங்குதான் உள்ளது என பெரியகுளம் தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய முதல்வர் த.நா.பாலமோகன் கூறினார்.

**பயிர் காப்பீட்டுத் திட்டத்தில் சேர விவசாயிகள் விண்ணப்பிக்க அழைப்பு**



பிரதமரின் பயிர் காப்பீட்டுத் திட்டத்தில் சேர, தேனி மாவட்டத்தில் விவசாயிகள் விண்ணப்பிக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து, மாவட்ட ஆட்சியர் ந. வெங்கடாசலம் வெளியிட்டுள்ள அறிவிப்பு: மாவட்டத்தில் நெல், கம்பு, சோளம், மக்காச்சோளம், உளுந்து, பாசிப்பயறு, நிலக்கடலை, கரும்பு சாகுபடியில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் மற்றும் குத்தகைதாரர்கள் பயிர் காப்பீட்டுத் திட்டத்தில் சேர விண்ணப்பிக்கலாம். பருவநிலை மாற்றம் மற்றும் மழையில்லாததால் பயிர் சாகுபடி செய்ய இயலாத நிலை, விதைப்பில் இருந்து அறுவடை வரை பயிர்களுக்கு ஏற்படும் பாதிப்பு, மகசூல் இழப்பு, இயற்கை சீற்றத்தால் ஏற்படும் பாதிப்பு ஆகியவற்றுக்கு பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் காப்பீடு வழங்கப்படும்.

பயிர் காப்பீட்டுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர், ஆண்டிபட்டி பகுதியில் 94425- 82695, கடமலைக்குண்டு பகுதியில் 97876-66483, பெரியகுளம் பகுதியில் 94420- 93682, தேனி வட்டாரத்தில் 98941-65388, கம்பம் பகுதியில் 97887-83833, உத்தமபாளையம் பகுதியில் 96556-75404, சின்னமனூர் பகுதியில் 89390-73799, போடி பகுதியில் 94425-65452 ஆகிய எண்களில் வேளாண்மை உதவி இயக்குநர்களை தொடர்பு கொண்டும், தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகள் மற்றும் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளுக்கு நேரில் சென்றும் விண்ணப்பிக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தி இந்து
தமிழால் இணைவோம்

## விவசாயிகளின் நண்பனான சிறுவன்!



குழந்தை சாதனையாளர்களை ஊக்குவிக்க டெல்லியில் தேசிய விருது வழங்கப்படுவது வழக்கம். ஒவ்வோர் ஆண்டும் குழந்தைகள் தினத்தையொட்டி இந்த விருதைக் குடியரசுத் தலைவர் வழங்குவார். இந்த ஆண்டு மட்டும் 36 குழந்தைகளுக்கு இந்த விருதைக் குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி வழங்கினார். இதில் சிறுவன் சுபேந்து குமார் சாஹூவின் சாதனை பலரையும் கவர்ந்தது.

அப்படி என்ன சாதனையைச் செய்தான் இந்தச் சிறுவன்? ஒடிசா மாநிலம் கன்ஜம் மாவட்டத்தில் சோமாபூர் திட்டம் நடுநிலைப்பள்ளியில் 8-ம் வகுப்பு படித்துவருகிறான் இந்தச்

சிறுவன். ‘விவசாயிகளுக்கான பரிசு’ என்ற பெயரில் ஒரு கருவியை உருவாக்கினான் இவன். இந்தக் கருவி மூலம் விவசாயிகள் மண்ணை உழுது விதைக்கலாம், பூச்சிக்கொல்லியைத் தூவலாம், நெல்லை அறுவடையும் செய்யலாமாம்.

போன வருடம் கொல்கத்தாவில் நடந்த அறிவியல் போட்டியில், இந்தக் கருவியை எப்படி உருவாக்குவது என எழுதி வெற்றி பெற்றான் சுபேந்து குமார் சாஹூ. இந்த ஆண்டு அந்தக் கருவியை உருவாக்கி விவசாயிகளுக்குப் பரிசாக வழங்கிவிட்டான். இதற்காகத்தான் குடியரசுத் தலைவர் விருதையும் ஜெயிச்சிருக்கார் இந்தக் குட்டி விஞ்ஞானி சாஹூ.

சாஹூவின் சாதனையைப் பாராட்டி ஒரு வெள்ளிப் பதக்கம், 10,000 ரூபாய் பரிசு, 3000 ரூபாய்க்கான புத்தகப் பரிசுக் கூப்பனும் வழங்கிப் பாராட்டினார் குடியரசுத் தலைவர்! நாமும் சாஹூவைப் பாராட்டுவோமா?

## சுத்தமான காற்றுக்கு என்ன வழி?



***<u>டெல்லி ஒரு விஷ வாயு அறையாக மாறியிருக்கிறது</u>***

டெல்லியின் காற்று அசுத்தமாகி விட்டது. டெல்லி ஒரு 'விஷ வாயு அறை' என்கிறார் முதல்வர் கேஜ்ரிவால். பல பகுதிகளில் காற்றில் அபாயகரமான அளவுகளில் உள்ள மாசு பணக்காரர், ஏழை, குழந்தைகள், முதியோர், நலிவடைந்தோரை மோசமாகப் பாதிக்கும்.

மத்திய அரசும் மாநில அரசும் அரசியல் செய்வதை ஒதுக்க வேண்டும். மக்களுக்கு இப்போதைய, எதிர்கால பாதிப்புகளைத் தடுக்க அவசரகால நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

டெல்லியைச் சுற்றியுள்ள ஹரியாணா, பஞ்சாப் மாநிலங்களில் உள்ள வயல்களில் வைக்கோலை எரிக்கிறார்கள். அதுதான் குளிர்காலத்தில் டெல்லியில் காற்று கெட்டுப்போவதற்கான பிரதான காரணம் என்கிறார்கள்.

நெல் அறுவடை முடிந்ததுமே கோதுமையை விதைக்க விவசாயிகளுக்குக் குறைவான காலமே இருக்கிறது. அதனால், வேகமாக வயலைத் தயார் செய்ய விவசாயிகள் வைக்கோலை எரிக்கின்றனர். இது பொதுவான வழக்கம். இதைத் தடுக்க மாநிலங்கள் சில நடவடிக்கைகளை எடுக்கின்றன. ஆனாலும், பழக்கம் தொடர்கிறது. அதனால், டெல்லியில் காற்று மாசு அடைவது மறுபடி மறுபடி தொடரவே செய்யும்.

வேறு பயனுள்ள நோக்கங்களுக்குப் பயன் படுத்தாமல் வைக்கோலை ஏன் விவசாயிகள் எரிக்கிறார்கள் என்று ஆராய வேண்டும். இந்த மாநிலங்களில் வைக்கோலுக்குப் பொருளாதார மதிப்பு இல்லை என்பதுபோலத் தோன்றுகிறது.

## நெல் - கோதுமை சுழற்சி

காலங்காலமாக பஞ்சாபிலும் ஹரியாணாவிலும், முக்கியமான பயிராக நெல்லை வளர்க்க மாட்டார்கள். பஞ்சாபில் 1970-1973 காலகட்டத்தில் நெல் பயிர் செய்ய 7.6% விளைநிலம்தான் பயன் படுத்தப்பட்டது. அது 2011-13 காலகட்டத்தில் 36% ஆகப் பிரம்மாண்டமாக உயர்ந்துள்ளது. அதேபோல, இதே காலகட்டத்தில் ஹரியாணாவிலும் நெல் விளையும் பரப்பு அதிகரித்துள்ளது. பாசன வசதிகள் வளர்ந்துள்ளன. அரசு குறைந்தபட்ச ஆதரவு விலை தருகிறது. விவசாயிகளிடம் தானியங்களை அரசு கொள்முதல் செய்கிறது. அதனால், விவசாயிகளுக்கு உத்தரவாதமான சந்தை கிடைத்துள்ளது. இவைதான் விவசாயிகள் நெல்லைப் பயிரிடுவதற்கான காரணங்கள். நெல் விளையும் பரப்பும் காலப்போக்கில் பெரிதாக வளர்ந்துள்ளது. பாரம்பரியமாக கோதுமையை விவசாயம் செய்தவர்கள் கோதுமையையும் நெல்லையும் மாறிமாறிச் சுழற்சி முறையில் விவசாயம் செய்ய ஆரம்பித்ததே இதன் விளைவு.

நிலத்தையும் இதர வளங்களையும் கடுமையாகப் பாதித்துள்ளது இந்தச் சுழற்சி. மண் வளம் குன்றி, நிலத்தடி நீர்மட்டம் குறைந்துள்ளது.” வேறு பயிர்களைப் பயிரிடலாமே” என்று மாநில அரசுகள் விவசாயி களிடம் பேசிப் பார்த்தன. ஆனால், அவர்கள் சம்மதிக்கவில்லை. சுழற்சி முறையில்தான் பயிரிடுகின்றனர். காய்கறிகளையும் பழங் களையும் மாற்றுப் பயிர்களாகப் பயிரிடுவதில் சந்தைப்படுத்தல் உள்ளிட்ட பிரச்சினைகள் அவர்களுக்கு உள்ளன.

## கோதுமை வைக்கோல்

பஞ்சாபும் ஹரியாணாவும் விவசாயத்தில் முன்னேறியவை. பஞ்சாபில் ஒரு ஹெக்டேருக்கு சராசரியாக 4 டன் வரையும்

ஹரியாணாவில் 3.2 டன் வரையும் அரிசி கிடைக்கிறது என்கிறது விவசாய அமைச்சகம். இந்த மாநிலங்களில் பெருமளவு விவசாயம் இயந்திரமயமாகியுள்ளது. அறுவடைக் காலத்தில் ஆட்கள் கிடைப்பதில்லை. கூலி அதிகம். அதனால், விவசாயிகள் கூட்டாக அறுவடை செய்கின்றனர்.

பஞ்சாபில் 2011-13 காலகட்டத்தில் சராசரியாக 11.1 மில்லியன் டன்கள் அரிசி உற்பத்தியானால் 16.6 மில்லியன் டன்கள் வைக்கோல் உற்பத்தியாகிறது என்கிறது உத்தேசமான மதிப்பீடு. ஹரியாணாவில் சராசரி அரிசி உற்பத்தி 1.3 லட்சம் டன்கள். 1.9 லட்சம் டன் வைக்கோலும் உற்பத்தியாகிறது.

அறுவடைக்காக இயந்திரங்களைப் பயன் படுத்துவது வயலில் மிச்சமிருக்கிற பயிர்க் கழிவுகளை அப்புறப்படுத்துவதைப் பாதிக்கிறது. வயலில் உள்ள பயிரை ஒட்ட வெட்டாமல் ஓரளவு விட்டே வெட்டுகிறது அறுவடை இயந்திரம். அதனால், களத்தில் அதிகமான வைக்கோல் மிஞ்சுகிறது. கோதுமைப் பயிரின் கழிவு விலங்குகளுக்குத் தீவனமாகிறது. அதனால், விவசாயிகள் அதைச் சேகரிக்கின்றனர். அதனைத் தீவனமாகத் தயாரிக்கும் தொழில்நுட்பமும் அவர்களிடம் உள்ளது. அதனால் விவசாயிகள் அதனை எரிப்பதில்லை.

**வைக்கோல் மின்நிலையங்கள்**

நெற்பயிரிலிருந்து வரும் வைக்கோல் இந்த மாநிலங்களில் தீவனமாகப் பயன்படவில்லை. அது கால்நடைகளுக்கு விருப்பமான தீவனமாக இல்லை. அதனால், அதைச் சேகரிப்பதற்குப் பணம் செலவழிக்க அவர்கள் தயாரில்லை. அதனால்தான் அதை எரித்துவிடுகின்றனர். வைக்கோலை எரிப்பது உடல்நலனுக்கு நல்லதல்ல என்று விவசாயிகளுக்குத் தெரியும். ஆனாலும் அவர்களுக்கு வேறுவழிகளில் அதைப்

பயன்படுத்துவதற்கான வழிகள் தெரியவில்லை. அதனால், இந்த விவகாரத்தில் விவசாயிகளை மட்டுமே குற்றம்சாட்டுவதில் பயனில்லை. அவர்களுக்கு உதவும்வகையில் இதைத் தீர்ப்பதற்கான தொழில்நுட்பத் தீர்வுகள்தான் தேவை. அதுதான் ஒவ்வொருவருக்கும் சுத்தமான காற்றைச் சுவாசிப்பதற்குத் தரும்.

பயோமாஸ் என்று ஆங்கிலத்தில் அழைக்கப்படும் உயிர்த்திரள் பாதுகாப்பான, நம்பகமான எரிபொருளைத் தரக்கூடியது. அது நிறைந்த வைக்கோலை மின்உற்பத்திக்காகப் பயன்படுத்தலாம். வைக்கோலை என்ன செய்யலாம் என்ற பிரச்சினையும் தீரும். மாநிலங்களில் உள்ள மின்பற்றாக்குறையும் தீரும்.

உயிர்த்திரளை வைத்து மின்சாரம் உற்பத்தி செய்யும் நிலையங்களை உருவாக்குவதில் மகாராஷ்டிரம், உத்தரப் பிரதேசம், கர்நாடகம், தமிழ்நாடு ஆகிய மாநிலங்கள் முன்னேறி உள்ளன. பஞ்சாபும் ஹரியாணாவும் போதுமான அளவு முன்னேறவில்லை என்கிறது புதுப்பிக்கத்தக்க சக்திக்கான மத்திய அமைச்சகம். வைக்கோலை வைத்து மின்சாரம் தயாரிக்கும் நிலையங்களை உருவாக்க வேண்டும். அவற்றுக்கான மூலதனம் வேண்டும். இதன் மூலம் வேலைவாய்ப்புகளும் உருவாகும்.

**கட்டமைப்பு தேவை**

வைக்கோலைச் சேகரிக்கவும், அவற்றை நறுக்குதல், இருக்கிற நிலையிலேயே ஏற்றுக்கொள்ளுதல் ஆகிய பணிகளைச் செய்வதற்கான நிர்வாகக் கட்டமைப்பு தேவை. வயலிலிருந்து அகற்றப்பட்ட வைக்கோல் கழிவுகளை மக்கவைத்துத் தழையுரமாக மாற்றுவதற்கும் முயற்சிகள் தேவை.

காட்போர்டு தயாரித்தல், பேக்கிங் பொருட்களைத் தயாரித்தல் ஆகிய பணிகளுக்காகச் சில தொழிற்சாலைகளும் காகித

ஆலைகளும் தற்போது ஒரு குறிப்பிட்ட அளவு வைக்கோலைப் பயன்படுத்துகின்றன. விஞ்ஞான ஆய்வுகள் செய்து வைக்கோலிலிருந்து ஈஸ்ட் புரோட்டீன் தயாரித்தல் உள்ளிட்ட முயற்சிகள் செய்யலாம். அதனால், புதிய தொழில்வாய்ப்புகள் வளரும்.

மேலும் சிறப்பான தானியமாக, மேலும் தரமான வைக்கோலைத் தருவதாக, மேலும் தரமான நெல் வகைகளையும் உருவாக்க வேண்டும். அத்தகைய இரட்டைப் பயன்பாடு கொண்ட நெல் வகைகளால் உணவுப் பாதுகாப்பும் கிடைக்கும். விவசாய வருமானமும் கிடைக்கும். சுற்றுச்சூழலும் மேம்படும்.

## கூட்டுறவு சங்க விவசாயிகள் 'மிரர் அக்கவுன்ட்' தொடங்க வேண்டும்: கூட்டுறவுத் துறை அறிவிப்பு

மத்திய அரசு கடந்த 8-ம் தேதி 1,000, 500 ரூபாய் நோட்டுகள் செல்லாது என அறிவித்தது. இதனால் ஏற்பட்டுள்ள பண நெருக்கடியால் கூட்டுறவு கடன் சங்கங்கள், நிலவள வங்கிகளின் பரிவர்த்தனை முடங்கியுள்ளது. தமிழகத்தில் உள்ள 4,654 தொடக்க வேளாண்மை கடன் சங்கங்கள் எவ்வித சேவையும் செய்ய இயலாமல் பாதிக்கப்பட்டுள்ளன. மாவட்ட தொடக்க வேளாண்மை வங்கி நிதி உதவி செய்யும் வரையில் சங்கங்கள் செயல்படாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக கூட்டுறவு சங்க நிர்வாகிகளிடம் கேட்டபோது, “2000-ம் ஆண்டுக்கு முன்னர் கூட்டுறவு கடன் சங்கங்களாக செயல்பட்டு வந்தவை. பின்னர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியாக மாறின. இதனை அறிந்த ரிசர்வ் வங்கி, ‘கூட்டுறவு சங்கங்கள் தங்களை வங்கிகள் என சொல்லிக்கொள்ளக் கூடாது’ என கட்டுப்பாடு விதித்ததால் தற்போது கடன் சங்கங்களாக

செயல்பட்டு வருகிறது. முழுக்க முழுக்க விவசாயிகளையே நம்பி இந்த சங்கங்கள் இயங்கி வருகின்றன.

தற்போது மத்திய அரசின் அறிவிப்பால் பழைய ரூபாய் நோட்டுகளை வாங்கக் கூடாது என கூட்டுறவுத் துறை வாய்மொழி உத்தரவு பிறப்பித்துள்ளது. இத னால் எவ்வித சேவையும் செய்ய இயலாமல் உள்ளோம். இதனால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப் பட்டு உள்ளனர்” என்றனர்.

விழுப்புரம் மாவட்ட கூட்டுறவு இணைப் பதிவாளர் சந்திரசேகரன் கூறும்போது, “கூட்டுறவுத் துறை யின் இயக்குநர் வெளியிட்டுள்ள சுற்றறிக்கையில், கூட்டுறவு கடன் சங்கங்களில் உறுப்பினர்களாக உள்ள விவசாயிகள் அருகில் உள்ள மத்திய கூட்டுறவு வங்கியில் மிரர் அக்கவுன்ட் (Mirror Account) தொடங்க வேண்டும். அதன் மூலம் பயிர்க் கடன், நகைக் கடன்களை மத்திய கூட்டுறவு வங்கிகளில் பெற்றுக்கொள்ளலாம். இது தற் காலிகமானது. நிலைமை சீராகும் வரை இது தொடரும். பின்னர் வழக்கம்போல கூட்டுறவு கடன் வழங்கும் சங்கங்கள் நகைக் கடன், பயிர் கடன் வழங்கலாம்” என்றார்.

விவசாயிகளுக்கான பயிர்க் கடன், நகைக் கடன் எப்படி கை யாளப்படுகிறது என, தேசிய உடைமையாக்கப்பட்ட வங்கிகளில் கேட்டபோது, “நகைக் கடன், பயிர்க் கடன் பெறும் விவசாயி யிடம் தொகையில் 10 சதவீதத்தை உடனே வழங்கிவிட்டு மீதியை அவரது கணக்கில் வரவு வைக் கிறோம்.

தேவைப்படும்போது அதனை அவர் ஏடிஎம் மூலமோ, வங்கியில் நேரடியாகவோ பெற்றுக்கொள்ளலாம்” என்றனர்.

**‘மிரர் அக்கவுன்ட்’ என்றால் என்ன?**

கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினராக உள்ள ஒருவர் ரிசர்வ் வங்கியின் கட்டுப்பாட்டில் உள்ள மத்திய கூட்டுறவு வங்கி அல்லது நகர்ப்புற கூட்டுறவு வங்கியில் இணையான கணக்கு (பேரரல் அக்கவுன்ட்) தொடங்க வேண்டும். அதன் பெயர் மிரர் அக்கவுன்ட். இந்த கணக்கின் மூலம் கூட்டுறவு கடன் சங்கம் கொடுக்கும் ரசீதை காட்டி கூட்டுறவு வங்கிகளில் பணத்தை பெற்றுக்கொள்ளலாம். அதேபோல, சங்கத்துக்கு பணம் செலுத்த வேண்டியதாக இருந்தாலும், வங்கியில் பணம் செலுத்தி அந்த ரசீதை சங்கத்தில் சமர்ப்பித்தால் போதும்.